සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
**Sabaragamuwa Provincial Department of Education**

| | |
|---|---|
| **இரண்டாம் தவணை 2018** | **தரம் 11** |
| **மனைப் பொருளியல்** | **02 மணி** |

## பகுதி 11

முதலாம் வினாவுடன் சேர்த்து ஐந்து வினாக்களுக்கு விடை தருக

ம / இந்து கல்லூரியில் கல்வி பயிலும் தரம் 10 – 11 மனைப்பொருளியல் பாடத்தை கற்கும் மாணவிகளால் கல்வி சுற்றுலா ஒன்றினை ஏற்பாடு செய்தனர். உணவுப் பாதுகாப்பு தொழிற்சாலையையும் , ஆடை உற்பத்தி தொழிற்சாலையொன்றையும் பார்வையிடச் சென்றனர். இதன் மூலம் விடயம் தொடர்பாக பரந்து அறிவினைப் பெற்றுக் கொண்டதோடு , அதனை சுவைபார்க்கவும் சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது. சுற்றுலாவை நிறைவு செய்த இவர்கள் மிகவும் பயனுள்ள சுற்றுலா ஒன்றினை செய்தாக குறிப்பிடுகின்றனர்.

1. சுற்றுலாவில் கலந்து கொண்ட மாணவர்கள் எவ்வித போசணைத் தேவைப்படுவோரில் உள்ளடங்குவர் ?
2. இப்பருவத்தினருக்கு தேவைப்படும் போசணைப்பதார்த்தங்கள் இரண்டிணைக் குறிப்பிடுக?
3. இவர்கள் சுற்றுலாவுக்கு எடுத்துச் செல்லக்கூடிய பகலுணவு வேளை ஒன்றைத் திட்டமிடுக?
4. உணவுப் பாதுகாப்பு தொழிற்சாலையில் பாதுகாக்கக்கூடிய உணவுப் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக?
5. உணவுகளை வெட்ட பயன்படுத்தப்படும் நுட்பமுறை இரண்டிணைக் குறிப்பிடுக?
6. ஆடைத் தொழிற்சாலையில் தைக்கக்கூடிய குழந்தை ஆடையொன்றின் மாதிரியுருயொன்றினை வரைக?
7. குழந்தை ஆடையை அலங்கரிக்க்கூடிய இரு அலங்காரத் தையல்களைக் குறிப்பிடுக?
8. ஆடையொன்றின் விளிம்பை மூடுவதற்கு பொருத்தமான நுட்பமுறை இரண்டினை குறிப்பிடுக?
9. தொழிற்சாலையினுள் இயற்கை காற்றோட்டம் நிலவுவதற்காக யன்னல்கள் சுவரில் சமாந்தரமாக வைக்கப்பட்டிருப்பதை அழைக்கும் முறை யாது?
10. இச்சுற்றுலாவில் அவர்களுக்கிடையே வளரும் சமூக விருத்திகள் இரண்டினைக் குறிப்பிடுக?

( 2 X 10 = 20 புள்ளி )

02 . எல்லா உயிரினங்களுக்கும் உணவு அத்தியவசியமாகும்

01. பெரும் போசணை , நுண்போசணை விளக்கம் தந்து உதாரணம் தருக?

(04 புள்ளி)

02. கேசின் , குளுட்டன் , ஒரெய்சின் , செயின் , இலக்குமின் எனும் புரத வகைகளில்
சோளம் , பருப்பு , பால் இவற்றில் காணப்படும் புரத வகையை குறிப்பிடுக

(03 புள்ளி)

03. கிளைக்கோஜன் எவ்வாறு குளுக்கோசு என்ற வடிவத்தில் சேமித்த உடலுக்கு சக்தியை வழங்கின்றது விளக்குக?

( 03 புள்ளி)

03. விசேட போசணைத் தேவைப்படுவோரினை அறிந்து அவர்களுக்குரிய உணவு போசணைகளை திட்டமிடுவது மிகவும் பொருத்தமானது.

01. விசேட போசணைத் தேவைப்படும் பருவங்கள் மூன்றினைத் தருக? ( 03 புள்ளி)

02. குழந்தைக்கான உணவை அறிமுகப்படுத்தும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக? ( 03 புள்ளி)

03. B,M,R சுட்டி குறையும் பருவத்தினை குறிப்பிட்டு B,M,R குறைவுபடுவதற்கான காரணங்கள் மூன்றினைத் தருக? ( 03 புள்ளி)

04. சுயதேவைக்கேற்ப ஆடை நிர்மானம் செய்வது மிகவும் பொருத்தமாகும்.

01. இயற்கை நார் வகையினைக் குறிப்பிட்டு இவ்விரண்ட உதாரணம் தருக?

( 03 புள்ளி )

02. குழந்தை ஆடையின் கழுத்து கைக்குழவை , கீழ் மடிப்பு அலங்கரிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய தையல் முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக?

( 03 புள்ளிகள் )

03. குழந்தை ஆடையை துணி மீதப்படுத்தப்படும் முறையில் மாதிரியுருவை வைத்து வெட்டும் முறையினை படம் மூலம் காட்டுக? ( 04 புள்ளிகள் )

05. மனையொன்றின் உள்ளக , வெளியக அலங்காரிப்ர்க்காக கலையின் அடிப்படை அம்சங்கள் கலைக் கோட்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

01. கலையின் அடிப்படை அம்சங்கள் மூன்றினைப் பெயரிடுக?

( 03 புள்ளிகள் )

02. வீட்டுத் தோட்ட அலங்கரிப்பின்போது கவனம் செலுத்த வேண்டிய மூன்று விடயங்களைக் குறிப்பிடுக?

( 03 புள்ளிகள் )

03. தனிநிற இசைவின்படி படுக்கையறையை அலங்கரிக்கும் முறையினை விபரிக்க?

( 04 புள்ளிகள் )

06. 01 திருமண விழா ஒன்றில் கூடுதலான விருந்தினருக்கு உணவு பரிமாறும் முறையினைக் குறிப்பிட்டு அதன் மூலம் கிடைக்கும் அகூலங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

( 03 புள்ளிகள் )

02. விசேட வைபவத்தின் போது உணவு பரிமாறலில் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக?

( 03 புள்ளிகள் )

03. விழாவொன்றினை ஒழுங்கமைக்கும்போது முகாமைத்தவத்தின் படிமுறைகள் நான்கினைக் குறிப்பிடுக?

( 04 புள்ளிகள் )

07. 01. a. பலோபியன் குழாய்

b. சூழலம்

c. கருப்பை அவ்வுறுப்புக்களில் இடம்பெறும் தொழிற்பாடுகள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக?

(03 புள்ளிகள் )

02. அயடீன் குறைபாடுள்ள கர்ப்பிணித் தாயிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மூன்றினைக் கறிப்பிடுக?

( 03 புள்ளிகள் )

03. முற்பிரசவ விருத்திக் கட்டங்கள் 03 ஐக் கறிப்பிட்டு விளக்கம் தருக?

( 04 புள்ளிகள் )